# பெரம்பூர், திருச்சி தொகுதிகளின் தேர்தல் வழக்குகள்!

## முதல்வர் விஜய்க்கு உயர்நீதிமன்றம் நோட்டீஸ்!

சென்னை, ஜூலை 9 -

சென்னை பெரம்பூர் தொகுதியில் முதல்வர் விஜய் வெற்றியை எதிர்த்து, தி.மு.க. வேட்பாளர் ஆர்.டி. சேகர் மற்றும் வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோர் தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

திருச்சி கிழக்கு தொகுதியில், விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து தி.மு.க. வேட்பாளர் இனிகோ இருதயராஜ் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த நான்கு வழக்குகளும் நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தன.

இதேபோல, வில்லிவாக்கம் தொகுதியில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா வெற்றி பெற்றதை எதிர்த்து தி.மு.க. வேட்பாளர் கார்த்திக் மோகன் மற்றும் சிவராஜ் ஆகியோர் தாக்கல் செய்திருந்த தேர்தல் வழக்குகளும், விசாரணைக்கு வந்தன.

இதனை விசாரித்த நீதிமன்றம், திருச்சி கிழக்கு மற்றும் பெரம்பூர் தொகுதி தொடர்பான தேர்தல் வழக்குகளில் முதல்வர் விஜய், இந்திய தேர்தல் ஆணையம் ஆகியோர் 3 வாரங்களில் பதிலளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேபோல் அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவும் பதிலளிக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரம் சட்டமன்றத் தொகுதி மேலக்கோட்டை ஊராட்சியில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் மற்றும் அங்கன்வாடி மையத்தை திறந்து வைத்து, தொகுதியில் தொடர்ந்து 7வது முறையாக வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் அர. சக்கரபாணி எம்.எல்.ஏ. பேசினார். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் தர்மராஜன், ஒன்றிய துணைச் செயலாளர் முருகானந்தம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தினேஷ் உள்ளிட்ட முன்னாள் ஊராட்சிமன்ற பிரதிநிதிகள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கோவை அங்கன்வாடி மையங்களில் எடை மிஷின்கள் தட்டுப்பாடு!

கோவை, ஜூலை 9 -

கோவை மாவட்டத்தில் உள்ள அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கான எடை மிஷின்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், தாய்மார்களின் எடையை கழித்து குழந்தையின் எடையை கூறும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் சார்பில் 1,670 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகிறது. இந்த அங்கன்வாடி மையத்தில் சுமார் சுமார் 21 ஆயிரம் குழந்தைகள் பயின்று வருகின்றனர். இந்த மையங்களில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் நலன் சார்ந்த ஊட்டச்சத்து மற்றும் கல்விப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கு தேவையான ஊட்டச்சத்து, ஆரம்ப கால கல்வி கற்பதற்கான சூழல் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பாக, ஆரோக்கியமாக வளர்வதற்கு தேவையான பணிகள் செயல்படுத்தப்படுகிறது. குழந்தைகள் அறிவுத்திறன் வளர்ச்சி அடைய அங்கன்வாடி மையங்களில், 2 வயது முதல் 4 வயது பூர்த்தியான குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வி கற்பிக்கப்படுகிறது. கல்வி பயிலும் குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்கப்படுகிறது.

ஊட்டச்சத்து குறைபாடுகள் உள்ள குழந்தைகளை கண்டறிந்து, அதற்கு ஏற்ப அவர்களுக்கு சத்தான உணவு வழங்கப்படுகிறது. குழந்தைளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க தேவையான உணவு வகைகள் அங்கன்வாடி மையம் வாயிலாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கர்ப்பிணிகள் மற்றும் 5 வயது குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலைமையை மேம்படுத்துவது ஆகும். இந்த மையத்திற்கு வரும் குழந்தைகளின் எடையை கண்காணித்து, ஒருங்கிணைந்த குழந்தைகள்கள் வளர்ச்சி திட்ட அதிகாரிக்கு மாதம் தோறும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பாக, 3 வயது வரையுள்ள குழந்தைகளின் எடை தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

இதற்காக அரசால் குழந்தைகள் எடை பார்க்கும் மிஷின்கள் வழங்கப்பட்டன. இந்த எடை மிஷின்கள் பல பழுதடைந்து இருப்பதால் குழந்தைகளின் எடையை கண்டறிவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும், அங்கன்வாடி மையத்திற்கு வரும் தாய்மார்களை அங்குள்ள சாதாரண எடை மிஷின்களில் குழந்தையுடன் சேர்த்து நிற்க வைக்கின்றனர். பின்னர், தாய்மார்களின் எடையை அங்கன்வாடி பணியாளர்கள் கேட்டுக்கொண்டு, தாயின் எடையை கழித்து குழந்தையின் எடையை பதிவு செய்கின்றனர். சில அங்கன்9வாடிகளில் வெளியில் சென்று எடையை பார்த்துக்கொள்ள கூறுகின்றனர். இதனால், எடைகுறைவான குழந்தைகளை கண்டறிவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும், அங்கன்வாடி மையங்களின் மூலம் குழந்தைகளின் எடை குறித்த தவறான தகவல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு வருவதாக புகார்கள் எழுந்துள்ளது.

இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், குழந்தைகளின் எடையை கண்டறியும் வகையில் எடை மிஷின்களை அங்கன்வாடி மையங்களுக்கு வழங்க வேண்டும் எனவும் தாய்மார்கள் தரப்பில் வலியுறுத்தியுள்ளனர்.

### திருவள்ளூர் மாவட்டம் - பள்ளிப்பட்டு த.வெ.க. நிர்வாகிகள்

# ஆரம்ப சுகாதார நிலையங்களில் விஜய் படத்தை மாட்டி அடாவடி!

## ‘ரீல்ஸ் அலப்பறை’ அரசியலுக்கு முடிவுகட்ட நடவடிக்கை எப்போது?

திருவள்ளூர், ஜூலை 9 -

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பள்ளிப்பட்டு மேற்கு ஒன்றியத்தில், தமிழக வெற்றி கழக ஒன்றிய செயலாளர் ரமேஷ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் அரசு பள்ளிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அரசியல் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் அப்பகுதியில் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளன.



குற்றச்சாட்டுகளின்படி, அரசு பள்ளிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று தமிழ்நாடு முதலமைச்சரின் படங்களை வழங்கி, அவற்றை அரசு வளாகங்களில் பொருத்தியதாகவும், பின்னர் அந்த நிகழ்வுகளை சினிமா பாடல்களுடன் ரீல்ஸ் வடிவில் சமூக வலைதளங்களில் வெளியிட்டு அரசியல் விளம்பரமாக பயன்படுத்தியதாகவும்கூறப்படுகிறது.

மேலும், அரசு பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் செவிலியர்களுக்கு சால்வை அணிவித்து, அது அரசியல் பாராட்டு நிகழ்ச்சி போல காட்சிப்படுத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அரசு ஊழியர்கள் அரசியல் நடுநிலையுடன் செயல்பட வேண்டிய நிலையில், இத்தகைய நிகழ்வுகள் குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அரசு பள்ளிகளும், அரசு மருத்துவ நிலையங்களும் அனைத்து மக்களுக்கும் சொந்தமான பொது நிறுவனங்கள். அவற்றின் வளாகங்கள் எந்தக் கட்சியின் விளம்பரத்திற்கும் பயன்படுத்தப்படக்கூடாது என்பதே நிர்வாக நெறிமுறைகளின் அடிப்படை நோக்கமாகும். எனவே, அரசு நிறுவனங்களில் அரசியல் நடவடிக்கைகள் நடைபெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையா என்பதை சம்பந்தப்பட்ட துறைகள் உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

அரசு நிறுவனங்கள் அரசியல் போட்டிக்கான களமாக மாறுகின்றன என்ற எண்ணமே பொதுமக்களின் நம்பிக்கையை பாதிக்கக்கூடும். இதுபோன்ற குற்றச்சாட்டுகள் எழும்போது, அவற்றை அலட்சியப்படுத்தாமல், வெளிப்படையான விசாரணை நடத்தி உண்மை நிலையை மக்களிடம் தெரிவிப்பது நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

எனவே, இந்த விவகாரம் தொடர்பாக கல்வித் துறை, சுகாதாரத்துறை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரிவான விசாரணை மேற்கொள்ள வேண்டும். குற்றச்சாட்டுகள் ஆதாரங்களுடன் உறுதி செய்யப்பட்டால், விதிமுறைகளை மீறிய வர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், எதிர்காலத்தில் அரசு நிறுவனங்கள் அரசியல் விளம்பர நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத வகையில் தெளிவான வழிகாட்டுதல்கள் அமல்படுத்தப்பட வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அமராவதி அணையில் மீன் வளத்துறை சார்பில் இந்த ஆண்டுக்கான மீன் குஞ்சுகளை சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் அணையில் விட்டார். இதில் உடுமலை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ஈ.கே.மாரிமுத்து, தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஈஸ்வரசாமி, கிழவன்காட்டூர் பழனிச்சாமி உள்பட மீன் வளத்துறை மற்றும் பொதுப் பணித்துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே தாழவேடு கிராமத்தில்

# குடிக்கத் தண்ணீர் கூட கிடைக்காத அவலம்!

## த.வெ.க. அரசைக் கண்டித்து பெண்கள் சாலை மறியல்!

திருவள்ளூர் ஜூலை 9 -

“மக்கள் நல ஆட்சி” என்று கூறி ஆட்சிப் பொறுப்பேற்ற த.வெ.க. அரசின் நிர்வாகத்தில், குடிநீர் போன்ற அடிப்படை தேவைக்காகவே பொதுமக்கள் சாலையில் இறங்கி போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் கடுமையாக விமர்சிக்கின்றன. நிர்வாக அலட்சியம், பராமரிப்பு குறைபாடு மற்றும் பிரச்சினைகள் ஏற்பட்ட பிறகே நடவடிக்கை எடுக்கும் நடைமுறையே மாநிலத்தின் பல பகுதிகளில் தொடர்வதாகவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.



இந்தச் சம்பவம் குறித்து போது. பொதுமக்கள் “குடிநீர் போன்ற அத்தியாவசிய தேவையையே சீராக வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பது அரசின் நிர்வாக திறன் குறித்து கேள்விகளை எழுப்புகிறது. பிரச்சினைகள் ஏற்பட்ட பிறகே அதிகாரிகள் களமிறங்கும் நடைமுறை தொடராமல், முன்னெச்சரிக்கை பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளன.

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியத்துக்குட்பட்ட தாழவேடு காலனியில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பகுதிக்கு இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் மூலம் மின் மோட்டார்கள் உதவியுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் தண்ணீர் ஏற்றப்பட்டு, பின்னர் தெருக் குழாய்கள் வழியாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு ஒரு மின் மோட்டார் பழுதடைந்ததால், ஒரே ஒரு மோட்டாரை மட்டுமே நம்பி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் ஏற்கனவே குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த நிலையில், மீதமிருந்த மற்றொரு மோட்டாரும் இன்று திடீரென செயலிழந்ததால், கிராமம் முழுவதும் குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. குடிப்பதற்கே தண்ணீர் இல்லாத அவலநிலையால் பெண்கள், முதியவர்கள் மற்றும் குழந்தைகள் கடும் சிரமத்தை சந்தித்ததாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த பெண்கள் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திருத்தணி -நாகலாபுரம் மாநில நெடுஞ்சாலையில் திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள், வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள், பேருந்து பயணிகள் உள்ளிட்ட ஏராளமானோர் நீண்ட நேரம் சாலையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு பள்ளி வாகனங்கள் மற்றும் பேருந்துகளுக்கு மட்டும் போராட்டக்காரர்கள் வழிவிட்டனர்.

போராட்டம் நீண்ட நேரம் நடைபெற்றபோதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக வரவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சாட்டினர். இதனால் பொதுமக்களிடையே மேலும் அதிருப்தி ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் போலீசார் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தி, பழுதடைந்த மோட்டாரை விரைந்து சீரமைத்து குடிநீர் விநியோகத்தை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

# நாகை மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் மதியழகன் விபத்தில் பலி!

## கழகத்தினர் அஞ்சலி!

வேதாரண்யம், ஜூலை 9 -

வேதாரண்யம் அருகே அடையாளம் தெரியாத வாகனம் மோதி பைக்கில் சென்ற மாவட்ட தி.மு.க. விவசாய அணி துணை அமைப்பாளர் மதியழகன் அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுகா பஞ்சநதிக்குளம் கிழக்கு வடக்குகாடு பகுதியைச் சேர்ந்தவர் மதியழகன் (வயது 58) அவர்கள் நாகை மாவட்ட திமுக விவசாய அணி துணை அமைப்பாளராக இருந்து வந்தார்.

இவர் தனது வீட்டில் இருந்து கடந்த 5 ஆம் தேதி அன்று இரு சக்கர வாகனத்தில் வாய்மேடு நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போழுது மருதூர் தெற்கு சிவகுருபாண்டியன் சமாதி அருகே அடையாளம் தெரியாத வாகனம் பைக் மீது மோதியது.

இதில் படுகாயம் அடைந்த மதியழகன் அவர்கள் தஞ்சை தனியார் மருத் துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார்.


அங்கு சிகிச்சை பலனின்றி 6 ஆம் தேதி அன்று மறைவெய்தினார். இறந்த மதியழகன் தி.மு.க.செயற்குழு உறுப்பினரும் வழகறிஞர் மறைமலை சகோதாரும் ஆவார்.

செய்தி அறிந்ததும் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த மதியழகன் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராயபுரம் கே.இ. சம்பந்தம்

ஜூலை 9 (1993)



நீதிக்கட்சிக் காலம் தொட்டு திராவிட இயக்க பற்றாளராக விளங்கியவர்.

வட்டக் கழகச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும், இராயபுரம் பகுதி அவைத் தலைவராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகத்திற்கு சொந்தமாக ஒரு அலுவலக கட்டிடம் வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பியபோது, இராயபுரத்தில் ஒரு கட்டிடத்தை முன்னின்று விலைபேசி கழகத்திற்கு வாங்கிட துணைபுரிந்தவர். அக்கட்டிடம் பின்னர் ‘அறிவகம்’ என்று அண்ணாவால் பெயர் சூட்டப்பட்டு தலைமைக் கழகமாக இயங்கியது

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று ஏழு முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.